**சார்பு நீதிமன்றம், ஓமலூர்.**

LAOP. 98/2020

நாள். 23.11.2022

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 23.11.2022 ம் நாளாகிய இன்று திருமதி.மங்கையர்கரசி, Gr-II பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி: | : எ.ம.சா.2 | ஜாதி | |
| பெயர் | ராணி | தொழில் | : |
| த/பெ. | : | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

<u>**முதல் விசாரணை**</u>

நான் இம்மனுவின் 6ம் எதிர்மனுதாரர் மனைவி. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகளை படித்துப் பார்த்து உண்மை என தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

<u>**குறுக்கு விசாரணை - மனுதாரர் தரப்பு**</u>

இந்த மனு சொத்துக்கள் எனது மாமியார் முனிரத்தினம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். இன்றைய தேதி வரை வருவாய் துறை ஆவணங்கள் பட்டா, சிட்டா அணைத்துமே எனது மாமியார் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். நில எடுப்பு சம்மந்தமாக முதலில் சொத்தின் உரிமையாளரான எனது மாமியாருக்குத்தாள் அரசாங்கத்திடம் இருந்து அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது கணவர் சிவப்பிரகாசம் இறந்துவிட்டார். மேற்படி இறந்துபோன எனது கணவருக்கு யார் யார் வாரிசுகள் என்றால் நான், முனிகிருஷ்ணன், எனது மகள் நாகமணி மூவர் மட்டுமே வாரிசுகள் ஆவோம். இறந்துபோன முனிரத்தினம்மாளின் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து வந்தால்தான் இந்த இழப்பீட்டு தொகையை வாங்க முடியும் என்றால் சரிதான். எனது கணவர் 12.09.2018

தேதியில் பனங்காடு, ஓமலூரில் இறந்துவிட்டார். வேறு எந்த வழக்குகளும் தாவா சொத்து குறித்து எந்த நீதிமன்றத்தில் இல்லை என்றால் சரிதான். அரசாங்கத்தில் வைப்பீடு செய்துள்ள தொகையை உயர்த்தி அளிக்க வேண்டும் என மேல்முறையீடு எதுவும் செய்யப்போகிறீர்களா என்றால் இல்லை.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

**ஒப்பம்/RW2**

**ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்**